12.11.2024

O.S.No.365/2014

வா.சா.1.திரு.முத்தன் த.பெ. கருப்பன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை தொடர்ச்சி

1. நான் தற்போது குடியிருக்கும் வீட்டிற்கு எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. எனது வீட்டின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டிற்கு பட்டாவே கிடையாது என்றாலும், இந்த வழக்கிற்காக பட்டா இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. பொன்னையா வீட்டின் வழியாகதான் எனது வீட்டிற்கு மின் இணைப்பு வயர் செல்கிறது என்றால் சரிதான். நான் VAO-விடம் பொன்னையாவிற்கு பட்டா தருவதற்கு ஆட்சேபணை இல்லை என கடிதம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-14 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் அல்ல. வா.சா.ஆ-14 ஆவணத்தில் உள்ள வாக்குமூலம் நான் கொடுதது கையொப்பம் போட்டுவிட்டு, தற்போது அது எனது கையொப்பம் இல்லை என இந்த வழககிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பொன்னையா குடியிருந்து வரும் இடத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல, எனதுஇடத்தினையும் சேர்த்து அவர் பட்டா போட்டுள்ளார். பொன்னையா எனது இடத்தினை பட்டா போடவில்லை என்றாலும், நான்தான் பொன்னையா இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது வீட்டிற்கு செல்வதற்கு பொன்னையா இடத்தில் பாதை எதுவும் இல்லை என்றாலும், காலனிக்கு செல்லும் பாதை வழியாகத்தான் எனது வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றாலும் சரியல்ல. பொன்னையா இடத்தினை அபகரிக்கும் நோக்கத்தில் அத்துமீறி அவரதுஇடத்தில் உள்ளே நுழைந்து பில்லர் எழுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேலூர்.**